உள்ளடக்கம்

1. அறிமுகம 4

1.1 பின்னனி 4

1.2. கடமைகள் 4

1.3. நிறுவனக் கட்டமைப்பு 5

1.4. பிரிவுகளின் பொறுப்பக்கள் 5

2. செயலாற்றுகை 9

2.1. வளிமண்டலவியல்தரவு வலைப்பின்னல் 9

2.1.1. வளிமண்டலவியல் அவதானிப்புகள் 9

2.1.1.1 . மேற்பரப்புஅவதானிப்புகள் 10

2.1.1.1.1. சுருக்கவளிமண்டலவியல்தகவல் 10

2.1.1.1.2 மழைவீழ்ச்சிதகவல்கள் 11

2.1.1.1.3. கமத்தொழில் வளிமண்டலவியல் தகவல்கள் 11

2.1.1.2 மேற்பகுதி வளிமண்டலத்தின் தகவல்கள் 12

2.1.2.தரவுக் கட்டுப்பாடு மற்றும் ஆவணமயமாக்கல் 13

2.1.3 வளிமண்டலவியல் தரவு விநியோகம் 13

2.2. தகவல்கள் வழங்குதல் 14

2.2.1 பொது மக்களுக்கு தகவல்கள் 14

2.2.2 உலகலாவிய சமூகத்திற்கான தகவல்கள் 15

2.2.3. வானிலை அறிக்கைகள் 15

2.3. விமானப்போக்குவரத்து கடற்படை செயற்பாடு

ஆகியவற்றுக்கான வளிமண்டலவியல் சேவைகளை வழங்குதல். 15

2.3.1 விமானப் போக்குவரத்துக்கான வளிமண்டலவியல் சேவைகள் 15

2.3.1.1 கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையம் 16

2.3.1.2 மத்தளை சர்வதேச விமானநிலையம் 16

2.3.1.3. இரத்மலானை விமானநிலையம் 17

2.3.2 கடல்சார் செயற்பாடுகளுக்கு வளிமண்டலவியல் சேவைகளை வழங்குதல் 17

2.3.2.1 கப்பல் போக்குவரத்து அறிக்கை 17

2.3.2.2 கப்பற் தொகுதி எதிர்வுகூறல் 18

2.3.2.3. பலநாள் மீன்பிடி வள்ளங்களுக்கான எதிர்வுகூறல் 18

2.4. முன்னெச்சரிக்கை தகவல்கள் 18

2.5 .பொதுவிழிப்புணர்வு 19

2.5.1 பொதுவிழிப்புணர்வுநிகழ்ச்சித்திட்டம் 19

2.5.1.1 திணைக்களவிஜயங்கள் 19

2.5.1.2. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 20

2.5.1.3. நடாத்தப்பட்ட மாநாடுகள்/பயிற்சிப் பட்டறைகள் 21

2.5.1.3.1. உலகவளிமண்டலவியல் தினம் 21

2.5.1.3.2 பருவகாலக் கருத்தரங்கு 22

2.5.1.4. கண்காட்சியில் பங்கேற்றல் 22

2.5.2. வளிமண்டலவியல் கருவிகளும் உபகரணங்களும் 22

2.5.2.1 உபகரணப்பிரிவு 23

| | |
|---|---|
| 2.5.2.2. இலத்திரனியல் பொறியியல் பிரிவு | 23 |
| 2.6. ஆராய்ச்சி | 23 |
| 2.7. வரையறுக்கப்பட்ட வானியல்சேவைகளை வழங்கல் | 24 |
| 2.3. திணைக்களத்தின் அபிவிருத்திப் பணிகள் | 25 |
| 2.8.1. நிலையான இயக்கச்செயற்பாடு | 25 |
| 2.8.2. நடாத்தப்பட்டபயிற்சி /கருத்தரங்குகள்- | 25 |
| 2.9. இயலுமை விருத்தி | 25 |
| 2.9.1.வெளிநாட்டு விஜயங்கள் | 25 |
| 2.9.2. உள்ளூர் பயிற்சிகள் | 28 |
| 3. நிருவாகம் மற்றும் நிதிப்பிரிவுகளின் செயலாற்றுகை | 29 |
| 3.1 நிருவாகப்பிரிவு | 29 |
| 3.1.1 ஆட்சேர்ப்பு | 29 |
| 3.1.2. ஓய்வுபெறல்,பதவிவிலகல்,விடுவிப்புகள், இறப்புகள் | 29 |
| 3.1.3 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் இணைத்துக்கொள்ளல் | 30 |
| 3.1.4. பரீட்சைகள் | 30 |
| 3.1.5. ஏலம் | 30 |
| 3.1.6. நிர்மாணங்கள் | 30 |
| 3.2. நிதிப்பிரிவு | 31 |
| 3.2.1. வருமானம் | 31 |
| 3.2.2. செலவினம் | 35 |
| 4. நன்றி நவிலல் | 37 |

# 1.அறிமுகம்

## 1.1.பின்னனி

இலங்கையில் வளிமண்டல அளவுருக்கள் பற்றிய முறையான அவதானிப்புகள் 1867 ஆம் ஆண்டில் அளவைகள் திணைக்களத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.1904 ஆம் ஆண்டின் பின்னர் இச்செயற்பாடானது கொழும்பு வானிலை ஆய்வுநிலையத்தால் முன்னெடுக்கப்பட்டது. கொழும்புவானிவை ஆய்வுநிலையம் சுயாதீன அரசாங்க திணைக்களமொன்றாக மாற்றமடைந்தது. அதாவது வானிலை மற்றும் காலநிலை சேவைகளை வழங்கும் பிரதான நோக்கத்துடன் வளிமண்டலவியல் திணைக்களமாக 1948ஆம் ஆண்டில் மாற்றமடைந்தது. தற்சமயம் வளிமண்டலவியல் திணைக்களமானது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் செயற்படுகின்றது.

## 1.2 கடமைகள்

வளிமண்டலவியல் மற்றும் காலநிலை சேவைகளை வழங்கும் அரசாங்க நியதிச்சட்டஅமைப்பாக பின்வரும் பிரதானகடமைகள் திணைக்களத்தால் நிறைவேற்றப்படுகின்றன.

1. சர்வதேசதரங்களுக்கு அமைவாக வாநிலை மூலகங்களை அவதானித்தல்.
2. தேசிய அதிகாரசபை என்ற வகையில் வாநிலை மற்றும் காலநிலை சேவைகளை வழங்கல்.
3. மோசமான வாநிலை மற்றும் சுனாமி பற்றிய முன்னெச்சரிக்கை தகவல்கள்/ஆலோசனைகள் வழங்கல்.
4. தேசிய மற்றும் சர்வதேச விமானசேவைகளுக்கு வளிமண்டலவியல் சேவைகளை வழங்குதல்.
5. வளிமண்டல தரவுத்தளத்தை பேணுதல்.
6. வளிமண்டலவியல் மற்றும் துணைவிடயங்களில் கற்றல் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.

## 1.3.நிறுவனக் கட்டமைப்பு

திணைக்களமானது பணிப்பாளர் நாயகம் ஒருவரினால் நிருவகிக்கப்படுகின்றதுடன் பிரதான 05 பிரிவுகளையும் உள்ளடக்குகின்றது.இவை 05 பணிப்பாளர்களாலும் 16 இணைந்த உபபிரிவுகளாலும் நிருவகிக்கப்படுகின்றது.

தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக, 22 பிராந்திய வளிமண்டலவியல் நிலையங்கள், 36 தன்னியக்க வளிமண்டலவியல் அவதானிப்பு நிலையங்கள், 35 கமத்தொழில் வளிமண்டலவியல் நிலையங்கள் மற்றும் ஏறத்தாழ 400 மழைமானி நிலையங்கள் ஆகியனவும் திணைக்களத்தால் பேணப்படுகின்றன.

## 1.4 பிரிவுகளின் பொறுப்பக்கள்

| தொடர்எண் | பிரதானப் பிரிவு | உபபிரிவு | பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| 01 | அவதானிப்பு வலைப்பின்னல் மற்றும் உபகரணங்கள் | 1.1 உபகரணங்கள் (கருவி) பிரிவு | வளிமண்டலவியல் உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் பேணுகை, தளபாட மற்றும் தொழில்நுட்ப விடயங்களில் உதவிபுரிதல் மற்றும் கண்காட்சியில் பங்கேற்றல் |
| | | 1.2 மின்மற்றும் இலத்திரனியல்பேணுகைபிரிவு | மின்/இலத்திரனியல் வளிமண்டலவியல் உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் பேணுகை தன்னியக்கவானிலை முறைமைகள் செய்மதித்தரவு பெறும் முறைமைகள் ஆகியவற்றை |

| | | | |
|---|---|---|---|
| | | | பழுதுபார்த்தலும் பேணலும். |
| | | 1.3 வானொலிப் பரப்பமைவு பிரிவு | மேல்வளிமண்டலம் சார்ந்த தகவல்கள், மேல்வளிமண்டல வியல் தரவுச்சுவடி ஆகியவற்றை அவதானித்தல், திணைக்களத்திற்கு விஜயம் செய்யும் பார்வையாளர்களுக்கான விழிப்புணர்வு ஊட்டும் செயற்பாடுகளை நடாத்தல் . |
| | | 1.4 பிராந்திய வளிமண்டலவியல் நிலையங்கள் | 3 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை வளிமண்டலவியல் அவதானிப்புகள், தொடர்சியான வானிலை கண்காணிப்பு 6 மணித்தியாலங்களுக்கு ஒருமுறை மேல்வளி அவதானிப்பு (மேல்வளிநிலையங்களில்) |
| 02 | தரவுஉருவாக்கம்மற்றும்சுவடிக்கூடம் | 2.1 தரவுப்பிரிவு | தரக்கட்டுப்பாடு, வழிமுறை மற்றும் வளிமண்டலவியல் உபகரண தகவல் சுயப்பதிவு சுவடிக்கூடம் |
| | | 2.2 காலநிலை பிரிவு | பிராந்திய நிலையங்கள், தரக்கட்டுப்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | | | மற்றும் காலநிலை தரவு சுவடியாக்கம் என்பவற்றை ஒருங்கிணைத்தலும் முகாமைத்துவம் செய்தலும் |
| | | 2.3 மழைவீழ்ச் சிப்பிரிவு | மழைவீழ்ச்சி வலையமைப்பு நிலையங்கள், தரக்கட்டுப்பாடு மற்றும் காலநிலைத்தரவு சுவடியாக்கம் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல். |
| | | 2.4 வேளாண்மை வளி மண்டலவியல்பிரிவு | கமத்தொழிலில் வளிமண்டலவியல் வலையமைப்பு நிலையங்கள், தரக்கட்டுப்பாடு மற்றும் கமத்தொழிலில் வளிமண்டலவியல் தரவு சுவடியாக்கம் ஒருங்கிணைப்பு |
| | | 2.5 கணனிப்பிரிவு | தரக்கட்டுப்பாடு மற்றும் வளிமண்டலவியல் தரவுகளை எண் வடிவில் ஆவணமாக்கல் காலநிலை தரவுத்தளம் பேணுகை வெளித்தரப்பினருக்கு வளிமண்டலவியல் தரவு விநியோகம் செய்தல். |
| | | 2.6 நூலகம் | நூலகம் |
| | | 2.7 பதிவுஅறை | தரவு/தகவல் |

| | | | |
|---|---|---|---|
| | | | பதிவுகளின் ஆவணங்களை பாதுகாத்தல் |
| 03 | எதிர்வுகூறல் மற்றும் தீர்மானம்ஆகியவற்றுக்கு ஆதரவளித்தல் | 3.1தேசிய வளிமண்டலவியல் மற்றும் முன்னெச்சரிக்கை நிலையம் | வளிமண்டவியல் அவதானிப்புகள் வளிமண்டலவியல் தரவு வழிமுறையாக்கம் மற்றும் பகுப்பாய்வு, வாநிலை எதிர்வுகூறல் மற்றும் செய்திப்பரப்பல், தேசிய சுனாமி மற்றும் வானிலை அபாய முன்னெச்சரிக்கை நிலையமாக செயற்படல் |
| | | 3.2தொலைதொடர் பாடல் பிரிவு | வளிமண்டலவியல் அவதானிப்புகள் /தரவுகள் பரிமாற்றம், வானிலை எதிர்வுகூறல் பரப்புதல், முன்னெச்சரிகை மற்றும் ஆலோசனைகள் வழங்குதல் |
| | | 3.3 விமானநிலைய வளிமண்டலவியல் நிலையங்கள் | சர்வதேச சிவில் விமானபோக்குவரத்து தாபனம் மற்றும் உலக வளிமண்டலவியல் தாபன ஒழுங்குவிதிகளுக்கு அமைய விமானப்போக்குவரத்து |

| | | | |
|---|---|---|---|
| | | | வளிமண்டலவியல் சேவைளை வழங்குதல் |
| 04. | ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் அபிவிருத்தி | 4.1 ஆராய்ச்சிப்பிரிவு | வளிமண்டலவியல் மற்றும் காலநிலை ஆராய்ச்சி ஆய்வுகளை நடாத்துதல் |
| | | 4.2 பயிற்சிப்பிரிவு | பயிற்சி மற்றும் திணைக்கப் பரீட்சைகளை நடாத்துதல் |
| | | 4.3.காலநிலை மற்றும் சார்ந்த ஆய்வுநிலையம் | காலநிலை மற்றும் சார்ந்த பணிகளை மேற்கொள்ளல் |
| 05 | நிர்வாகம்மற்றும்நிதி | 5.1 தாபனப்பிரிவு | தாபனம் பற்றிய கடமைகள் |
| | | 5.2 நிதிப்பிரிவு | நிதி பற்றிய கடமைகள் |
| | | 5.3 வழங்கல் பிரிவு | களஞ்சியம் மற்றும் விநியோகம் |
| | | 5.4 பொதுப்பிரிவு | வெளிநாட்டு கொள்வனவு தொடர்பான செயற்பாடுகள். |
| | | 5.5 போக்குவரத்து பிரிவு | போக்குவரத்து தொடர்புடைய கடமைகள் |
| | | 5.6.சிவில் முகாமைத்துவ பிரிவு | சிவில் பேணுகை தொடர்பான கடமைகள் |

## 2. செயலாற்றுகை

### 2.1.வளிமண்டலவியல் தரவு வலைப்பின்னல்.

### 2.1.1 வளிமண்டலவியல் அவதானிப்புகள்

வளிமண்டலவியல் திணைக்கள அவதானிப்பு வலைப்பின்னலில் கிடைக்கக்கூடியதாகவுள்ள அவதானிக்கப்பட்ட வளிமண்டலவியல் தரவுகளை

மேற்பரப்பு வளிமண்டலவியல் தரவு மற்றும் மேல் வளிமண்டலம் வளிமண்டலவியல் தரவு என பொதுவாக வகைப்படுத்தலாம்.

### 2.1.1.1 மேற்பரப்பு அவதானிப்புகள்

#### 2.1.1.1.1 சுருக்க வளிமண்டலவியல் தகவல்

மேற்பரப்பு சுருக்க வளிமண்டலவியல் அவதானிப்புகள் பிராந்தியமட்டத்தில் மூன்று மணித்தியாலங்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படுகின்றன. அதன் பின்னர் அவதானிக்கப்பட்ட தரவுகள் தொகுக்கப்பட்டு சர்வதேச ரீதியில் பரப்பும்முகமாக உலகலாவிய தொலைதொடர்பாடல் முறைமையில் (உ.தொ.மு.) உள்ளடங்கும் வகையில் தலைமையகத்தில் அமைந்துள்ள தொலைதொடர்பாடல் பிரிவுக்கு உடனடியாக பரிமாற்றம் செய்யப்படுகின்றன. தேசிய வளிமண்டலவியல் நிலையம் மற்றும் விமானநிலைய வளிமண்டலவியல் நிலையங்கள் ஆகியனவும் இத்தரவுகளை அவர்களது வானிலை பகுப்பாய்வுக்கு உபயோகிக்கின்றன.

2014 ஆம்ஆண்டில், மழைவீழ்ச்சி, அமுக்கம், வெப்பநிலை, ஈரத்தன்மை, வளி, காண்புநிலை, வானிலை மற்றும் முகில் பற்றிய அவதானிப்புகள் உள்ளடங்களாக மொத்தம் 60,813 மேற்பரப்பு வளிமண்டலவியல் அவதானிப்புகள் வளிமண்டலவியல் திணைக்களத்தின் மேற்பரப்பு வளிமண்டலவியல் வலைப்பின்னல் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைமுறை சார்ந்த அவதானிப்புகளுக்கு மேலதிகமாக, பிரதான வாநிலை அளவுருக்களை பதிவு செய்யும் முகமாக சுயமாக பதிவுசெய்யும் உபகரணங்களும் வளிமண்டலவியல் நிலையங்களில் உபயோகிக்கப்படுகின்றன. 2014ஆம் ஆண்டில் உபயோகிக்கப்பட்ட மழைபதிகருவி (மழைவீழ்ச்சி) வெங்கதிரியக்கப்பதிகருவி , ஈரப்பதன், பதிகருவி (ஈரம்), அமுக்கவரைவி (மேற்பரப்புஅமுக்கம்), சூரியஒளி அட்டைகள் (சூரியஒளிவேளைகளில்) ஆகியவற்றின் எண்ணிக்கை முறையே 7090,7339, 6982, 983, 3121 மற்றும் 175 ஆகும் .

#### 2.1.1.1.2 மழைவீழ்ச்சி தகவல்கள்

மழைவீழ்ச்சி தரவுகளை அவதானிக்கும் நோக்கில் நாடுதழுவியவாறு தாபிக்கப்பட்ட மழைமானி நிலையங்களின் வலைபின்னலானது 487 மழைமானி நிலையங்களை உள்ளடக்குகின்றது. இவற்றில் 410 நிலையங்களில் இருந்து தரவுகள்

ஒழுங்கானமுறையில் பெறப்படுகின்றன. இந்த நிலையங்கள் அரசாங்க மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தொண்டு அவதானிப்பாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பேணப்பட்டு வருகின்றன. இந்த நிலையங்களில் மழைவீழ்ச்சியானது தினமும் மு.ப.8.30 மணிக்கு அளக்கப்படுவதுடன் மாத இறுதியில் தினசரி மழைவீழ்ச்சி அறிக்கையானது திணைக்களத்தால் பெறப்படுகின்றது. நாடலாவியவாறு தெரிவுசெய்யப்பட்ட 215 நிலையங்களில் இருந்து தினசரி மழைவீழ்ச்சி தரவுகள் வானிலை எதிர்வுகூறல் நோக்கங்களுக்காக நாளாந்த அடிப்படையில் பெறப்படுகின்றன.

2014ஆம் ஆண்டில் 28 புதிய மழைமானிநிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் 28 நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டில் 6 மழை மானி நிலையங்களும் மீள்தாபிக்கப்பட்டுள்ளன.

### 2.1.1.1.3. கமத்தொழில் வளிமண்டலவியல் தகவல்கள்

**கமத்தொழில்** வளிமண்டலவியல் நிலைய வலைப்பின்னல் 35 நிலையங்களை கொண்டுள்ளதுடன் இந்த நிலையங்களில் மேற்பரப்பு வளிமண்டலவியல் அவதானிப்புகளுக்கு மேலதிகமான பல்வேறு ஆழ அளவுகளில் மண்வெப்பநிலை, புல்தரை மீதான அவதானிக்கப்பட்ட ஆகக்குறைந்த வெப்பநிலை மற்றும் ஆவியாதல் வீதம் என்பனவும் அளக்கப்படுகின்றன. இந்த அவதானிப்புகள் இந்த நிலையங்களில் நாளைக்கு இரண்டு முறைமு.ப.8.00 மணிக்கும் பி.ப.5.30 மணிக்கும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த ஆண்டில் அவதானிப்பு இசைவிண்மையை திருத்தும் முகமாக 9 **கமத்தொழில்** வளிமண்டலவியல் நிலையங்களில் தொழில்நுட்ப பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

தலைமையகத்தால் தரவுகள் பெறப்பட்டதன் பின்னர், அவை தரக்கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்படுகின்றன. **கமத்தொழில்** வளிமண்டலவியல் வலைப்பின்னலில் இருந்து தரவுகள் ஆர்வமுள்ள தரப்பினருக்கு சாதாரண விலையில்

வழங்கப்படுகின்றன. இவ்வாண்டில் **கமத்தொழில்** வளிமண்டலவியல் தரவுகளை வெளித்தரப்புக்கு வழங்கியதன் மூலம் மொத்தமாக ரூபா 542,000,00/ தொகை சேகரிக்கப்பட்டுள்ளது.

### 2.1.1.2 மேற்பகுதி வளிமண்டலத்தின் தகவல்கள்

வளிமண்டலத்தின் பல்வேறு உயரங்களில் (மட்டங்களில்) காணப்படும் வளிமண்டலவியல் அளவுருக்களின் அவதானிப்பானது மேற்பகுதி வளிமண்டலத்தின் அவதானிப்புகள் எனபெயரிடப்பட்டுள்ளது. கொழும்பில் மேற்பகுதிவளி(மண்டல) அவதானிப்புகள் கிழமையில் மூன்றுமுறை 0600 மணிக்கு (UTC) மேற்பரப்பில் இருந்து ஏறத்தாள 20 கி.மீ. உயரத்தில் வானொலிப் பரப்பமைவு உபகரணத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டில் வானொலிப்பரப்பமைவு உபகரணத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் மொத்த எண்ணிக்கையானது 148 ஆகும்.

வானொலிப்பரப்பமைவு உபகரண அவதானிப்புகளுக்கு மேலதிகமாக, மேற்பகுதி வளிமண்டல வளித்தகவல்கள் பைலட்பலூன்(Pilot Balloon) அவதானிப்புகள் மூலம் கணக்கிடப்பட்டன.

கொழும்புக்கு மேலதிகமாக, மன்னார், அம்பாந்தோட்டை மற்றும் பொலொன்னறுவை நிலையங்களிலும் பைலட்பலூன் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.கொழும்பு , மன்னார், அம்பாந்தோட்டை மற்றும் பொலொன்னறுவையில் மேற்கொள்ளப்பட்ட பைலட்பலூன் அவதானிப்புகளின் எண்ணிக்கையானது முறையே 902, 830, 937 மற்றும் 650 ஆகும் .



### 2.1.2. தரவுக் கட்டுப்பாடு மற்றும் ஆவணமயமாக்கல்.

வளிமண்டலவியல் நிலையங்கள் வேளான்மை வளிமண்டலவியல் நிலையங்கள் மற்றும் மழைமானி நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளானது கொழும்பு தலைமையகத்தில் தரக்கட்டப்பாட்டுக்கு உட்படுத்தப்படுகின்றதுடன் அவற்றின் துல்லியத்தன்மையுடன் தொடர்புடைய சந்தேகம் ஏதும் இருப்பின் அவை மீள்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு ஆவணமாக்கலுக்கு முன்னர் திருத்தப்படுகின்றன.

மென்பிரதிகளின் தயாரிப்பு மற்றும் அவற்றின் ஆவணமயமாக்கல் என்பன (CLIMSOFT) க்ளிம்சொப்ட் மென்பொருள் உபயோகத் தின் ஊடாக வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகின்றன. மேலும் 2014 ஆம் ஆண்டில் ஆவண அடிப்படையிலான தரவுத் தாள்களை பாதுகாக்கும் முகமாக நவீன வசதிகளுடனான பதிவு அறையொன்று தாபிக்கப்பட்டது.

### 2.1.3 வளிமண்டலவியல் தரவு விநியோகம்

விசேடமாக மாற்றமடையும் காலநிலை நிலைமைகள் காரணமாக கடந்தகாலவளிமண்டலவியல் தரவுகளுக்கு உயர்ந்த தேவையேற்படுகின்றது. பல்வேறு ஆய்வுகளில் ஈடுபடும் பட்டதாரி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், தனிநபர்கள் வர்த்தகதாபனங்கள் மற்றும் நிர்மாணக்கம் பனிகள் இத்தரவுகளை கோருகின்றன. வேண்டுகோள் விடுக்கப்பட்ட அளவிலான தரவுகளின் அடிப்படையில் அவை குறுகியகால அளவுக்கு வழங்கப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட நிதிப்பெறுமானத்தை கொண்டவொரு தரவானது ஆய்வுகளுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றது.

இந்த ஆண்டில் 134 வானிலை அறிக்கைகள் மற்றும் 982 தரவு அறிக்கைகள் என்பன வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டில் திணைக்களமானது வெளித்தரப்பினருக்கு வளிமண்டலவியல் தரவுகள் மற்றும் அறிக்கைகளை விநியோகம் செய்ததன் ஊடாக ரூபா 5,177,383,00/ வருமானத்தை ஈட்டுவதற்கு இயலுமாக இருந்துள்ளது.

## 2.2. தகவல்கள் வழங்குதல்

### 2.2.1 பொது மக்களுக்கு தகவல்கள்

தேசிய வளிமண்டலவியல் நிலையமானது தீவின் வானிலை நிலைமை பற்றிய எதிர்வுகூறல்களை மு.ப.05.30 மணி, பி.ப. 12.00 மணி மற்றும்பி.ப.4.00 மணிக்கு தினமும் வழங்குகின்றது. தீவின் கடற்கரை பிரதேசத்திற்கான வானிலை எதிர்வுகூறல்கள் மு.ப.05.00 மணி மற்றும் பி.ப.12.00 மணிக்கும் அச்சு மற்றும் ஒலி ஒளிஊடகங்கள் வாயிலாக வெளியிடப்படுகின்றது.

மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் வெளியடப்பட்ட வானிலை எதிர்வுகூறல்களின் எண்ணிக்கையானது 1.095 ஆகும். மேலும் ஊடகங்களால் மேற்கொள்ளப்பட்ட 4,223 வானிலை விசாரணைகள் பதிவளிக்கப்பட்டுள்ளன.

தீவின் பிரதான பத்து நகரங்களுக்கான வானிலை நிலைமைகள் அச்சு ஊடகம் ஒலி ஒளி ஊடகம் மற்றும் இணையம் ஆகியவற்றுக்கு திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாக தினமும் பி.ப.04.00 மணிக்கு வெளியிடப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டில் அவ்வகையான 365 அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

### 2.2.2 உலகலாவிய சமூகத்திற்கான தகவல்கள்

நாடலாவிய அவதானிப்பு வலைப்பின்னலில் இருந்து சேகரிக்கப்படும் தேசிய வளிமண்டல தகவல்களை ஒவ்வொரு 3 மணித்தியாலங்களிலும் இந்தியாவின் புதுடில்லியில் அமைந்துள்ள பிராந்திய வளிமண்டலவியல் தொலைதொடர்பாடல் மையத்தின் ஊடாக உலகலாவிய வளிமண்டலவியல் சமுதாயத்திற்கு பரிமாற்றப்படுகின்றன. இம்மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் இந்த செயற்பாடு தடங்களின்றி தொடர்ச்சியாக இடம்பெற்றது.

### 2.2.3. வானிலை அறிக்கைகள்

2014 ஆம் ஆண்டில் பின்வரும் மேலதிக விசாரணைகளுக்கு தேசிய வளிமண்டல நிலையத்தினால் பதில் வழங்கப்பட்டுள்ளது.

- பொலிஸ், கோட்டல்கள் மற்றும் வர்த்தக தாபனங்கள் ஆகியவற்றில் இருந்து கிடைத்த வானிலை பற்றிய விசாரணைகள்-2238
- கடற்றொழில் சமூகத்திடமிருந்து கிடைத்த வானிலை பற்றிய விசாரணைகள்-780
- ஊடகங்களால் மேற்கொள்ளப்பட்ட வானிலை பற்றிய நேர்காணல்கள்-120
- சான்றளிக்கப்பட்ட வானிலை அறிக்கைகள்-134

## 2.3.விமானப்போக்குவரத்து கடற்படை செயற்பாடு ஆகியவற்றுக்கான வளிமண்டலவியல் சேவைகளை வழங்குதல்.

### 2.3.1 விமானப் போக்குவரத்துக்கான வளிமண்டலவியல் சேவைகள்

விமானப்போக்குவரத்து இயக்கச்செயற்பாடுகளின் பாதுகாப்பு , ஒழுங்குமுறைமை மற்றும் வினைத்திறன் ஆகியவற்றின் மீது வானிலையானது தாக்கத்தை செலுத்தலாம். எனவே விமானங்களின் இயக்கச்செயற்பாடுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் வானிலை நிலைமைகள் பற்றிய தொடர்ச்சியான கண்காணிப்பை பேணும் வகையில் விமானநிலைய வளிமண்டல உத்தியோகத்தர்களை திணைக்களமானது கட்டுநாயக்க, மத்தலை மற்றும் இரத்மலானை விமானநிலையங்களில் பேணுகின்றது.

#### 2.3.1.1 கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையம்

2014 ஆம் ஆண்டில் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் அமைந்துள்ள வளிமண்டலவியல் நிலையம் அதன் விமானதகவல்கள் பிராந்தியத்தின் வழியாக பயணிக்கும் விமானங்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்கியுள்ளது.

சென்றடையும் விமானநிலைய எதிர்வுகூறல்கள்(TAF) 1.460

வளிமண்டலவியல் விமானநிலைய அறிக்கைகள் (METAR) 17.028

விசேட அவதானிப்புகள் (SPECI) 628

வானிலை எச்சரிக்கைகள் (SIGMENT)154

விமானநிலைய எச்சரிக்கைகள் 28

விமான சுற்றறிக்கை உறைகள் 25134

பிரதேச எதிர்வுகூறல்கள் 5,945

செல்வழி எதிர்வுகூறல்கள் 4,678

### 2.3.1.2 மத்தளை சர்வதேச விமானநிலையம்

மத்தளை சர்வதேச விமானநிலையத்தால் விமானப்பயண சமூகத்திற்கு வழங்கப்பட்ட தகவல்களின் விபரங்கள் கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளன.

சென்றடையும் விமானநிலைய எதிர்வுகூறல் 1,460

வளிமண்டலவியல் விமானநிலைய அறிக்கைகள் 14,384

விசேட அவதானிப்புகள் 263

### 2.3.1.3. இரத்மலானை விமானநிலையம்

இந்த விமானநிலையத்தால் நிறைவேற்றப்படும் பிரதான பொறுப்புக்களாவன உள்ளூர்விமானங்களுக்கும் இலங்கை வான்படை விமான இயக்கச்செயற்பாடுகளுக்கும் அவசியமான வளிமண்டலவியல் தகவல்களை வழங்குவதாகும் .2014 ஆம் ஆண்டில் வழங்கிய சேவைகள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வளிமண்டலவியல் விமானநிலைய அறிக்கைகள் 4,760

விசேட அவதானிப்புகள் 347

விமானங்களுக்கு மேற்பரப்பு அமுக்க ஏற்பாடுகள் 130


### 2.3.2 கடல்சார் செயற்பாடுகளுக்கு வளிமண்டலவியல் சேவைகளை வழங்குதல்

#### 2.3.2.1 கப்பல் போக்குவரத்து அறிக்கை

இலங்கையை சூழ்ந்த கடற்பரப்பின் வளிமண்டலவியல் நிலைமை பற்றிய கப்பல் போக்குவரத்து அறிக்கைகள் தினமும்மு.ப.10.00 மணி மற்றும் பி.ப.4.00 மணிக்கு வெளியிடப்படுகின்றன. இவ்வாண்டில் வெளியிடப்பட்ட மொத்த கப்பல் போக்குவரத்து அறிக்கைகளின் எண்ணிக்கை 730 ஆகும்.

#### 2.3.2.2 கப்பற் தொகுதி எதிர்வுகூறல்

கப்பற்தொகுதி எதிர்வுகூறல் மு.ப.06.00 மணி மற்றும்பி.ப. 04.30 மணிக்கு வெளியிடப்படுகின்றன. அவை பின்வரும் வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள கடற்பரப்பின் வானிலை, கடல்சூழல் மற்றும் காற்றின் நிலைமைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.



2014 ஆம் ஆண்டில் வெளியடப்பட்டுள்ள மொத்த பக்கற்றொகுதி எதிர்வு கூறல்களின் எண்ணிக்கை 7.30 ஆகும்.

#### 2.3.2.3. பலநாள் மீன்பிடி வள்ளங்களுக்கான எதிர்வுகூறல்

தென் இந்தியசமுத்திரம், வங்காள விரிகுடா மற்றும் அராபியக்கடல் ஆகியவற்றின் கடற்பரப்புக்கான வானிலை எதிர்வுகூறல் தினமும் வெளியிடப்படுகின்றது. இந்த எதிர்வுகூறல்கள் 72 மணித்தியாலங்களுக்கு பொறுந்தும் வகையில் வெளியடப்படுவதுடன் , இலங்கை கடற்படை மற்றும் கடற்றொழில் திணைக்களம் ஆகிய வற்றின் ஊடாக பரப்பப்படுகின்றன. இந்த எதிர்வு கூறல் ஆரம்பிக்கப்பட்ட

2014 ஒக்டோபர் 01ஆம் திகதியில் இருந்து 2014 டிசெம்பர் 31ஆம் திகதி வரையில் 92 அத்தகைய அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

### 2.4. முன்னெச்சரிக்கை தகவல்கள்

சுனாமி மற்றும் ஆபத்தை விளைவிக்கும் வானிலை பற்றிய முன்னெச்சரிக்கை தகவல்கள் பொதுமக்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் போன்ற சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் தேசிய வளிமண்டலவியல் மற்றும் முன்னெச்சரிக்கை நிலையத்தால் வெளியிடப்படுகின்றன. சுனாமி எச்சரிக்கைகள் தயாரிக்கப்பட்டு இந்திய சமுத்திர சுனாமி எச்சரிக்கை முறைமை சேவை வழங்குநர்களின் ஒத்துழைப்புடன் வெளியிடப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக கடுமையான நிலநடுக்கம் பற்றிய 24 மணித்தியாள கண்காணிப்பும் கலிபோன்னியா ஒருங்கிணைந்த நிலநடுக்க வலைபின்னல் (CISN)மற்றும் ஐக்கிய அமெரிக்க புவிச்சரிதவியல் ஆய்வுநிலையம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் பேணப்படுகின்றது.

மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் தூண்டப்பட்ட நிலநடுக்கங்கள் இப்பிராந்தியத்தில் உற்படவில்லை.

### 2.5 .பொதுவிழிப்புணர்வு

### 2.5.1 பொதுவிழிப்புணர்வுநிகழ்ச்சித்திட்டம்.

விசேடமாக வளிமண்டலவியல் ஆபத்துக்கள் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் திணைக்களத்தின் பணியாட்களால் நடாத்தப்படுகின்றன.

#### 2.5.1.1. திணைக்கள விஜயங்கள்

பாடசாலைபிள்ளைகள், உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் மற்றும் பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் திணைக்களத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிவை பெற்றுக்கொள்ளும் முகமாக முறையாக திணைக்களத்திற்கு விஜயங்களை மேற்கொள்கின்றனர்.

திணைக்கள பணியாட்டொகுதியினர் வானிலை அளவுருக்களை அவதானித்தல் பற்றிய செய்முறைப்பாடங்களை நடாத்துவதுடன் அதற்கு மேலதிகமாக வளிமண்டலவியல், வளிமண்டலவியல் ஆபத்துக்கள் மற்றும் காலநிலை பற்றிய விரிவுரைகளையும் வழங்கி அத்தகைய குழுக்களை விழிப்பூட்டுகின்றனர். திணைக்களத்தில் இடம்பெற்ற விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்ற பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனைய தனிநபர்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலை பிள்ளைகள் அடங்கிய குழுக்களின் எண்ணிக்கை 300

மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 31,767

உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த குழுக்களின் எண்ணிக்கை 09

உயர்கல்வி குழுக்களைச் சேர்ந்த மாணவ/மாணவிகளின் மொத்தஎ ண்ணிக்கை 802

ஆயுதப்படையினரின் மொத்த எண்ணிக்கை 729

ஏனைய நபர்களின் மொத்த எண்ணிக்கை 924

### 2.5.1.2. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

வானிலை, வானிலை அனர்த்தங்கள் மற்றும் தயார் நிலையில் இருத்தல் பற்றிய விழிப்பூட்டும் வகையில் பிரதேசசெயலாளர் மட்டத்தில் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் திணைக்கள பணியாளர்களால்

நடாத்தப்படுகின்றன.இவ்வாண்டில் நடாத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

நடாத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்

| மாவட்டம் | அமைவிடம் |
|---|---|
| கண்டி | கண்டி பொலிஸ் சேவை-பங்கேற்றோர் - 60, பேராதனை பல்கலைக்கழக புவியியல் திணைக்களம்- பங்கேற்றோர் 70 |
| அம்பாறை | பிரதேச செயலகம் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்- பங்கேற்றோர் 480 |
| இரத்தினபுரி | பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஏனைய அரசாங்க நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், பாடசாலை பிள்ளைகள், ஆசிரியர்கள்- பங்கேற்றோர்2050 |
| களுத்தரை | பிரதேச செயலகம் ஏனைய அரச நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்- பங்கேற்றோர் 1000 |
| கேகாலை | பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஏனைய அரச நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், பாடசாலை பிள்ளைகள், ஆசிரியர்கள்-பங்கேற்றோர் 1200 |
| பொலன்னறுவை | அரச நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், வணிகத்துறையில் ஈடுபடுவோர், இலங்கைஇராணுவம், சுகாதாரத்துறை, பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள்-பங்கேற்றோர் 1700 |

| | |
|---|---|
| அம்பாந்தோட்டை | பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஏனைய அரசநிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், -பங்கேற்றோர் 480 |
| கொழும்பு | சேர்.ஜோன்கொதலாவ பல்கலைக்கழகம், N`hkhfk பிரதேசசெயலகம்-பங்கேற்றோர் 150 |
| காலி | பிரதேச செயலகம், ஏனைய அரச நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்- பங்கேற்றோர் 750 |
| திருகோணமலை | திருகோணமலை கடற்படை-பங்கேற்றோர் 800 |
| புத்தளம் | மாதம்பை பிரதேச செயலகம், -பங்கேற்றோர் 70 |

**2.5.1.3. நடாத்தப்பட்ட மாநாடுகள்/பயிற்சிப் பட்டறைகள்**

**2.5.1.3.1. உலக வளிமண்டலவியல் தினம்**

‘‘வானிலை,காலநிலை ஆகியவற்றில் இளைஞர்களை ஈடுபடுத்தல்’’ எனும் தொணிப்பொருளில் அநேகமானோர் பங்குபற்றிய பயிற்சிப்பட்டறையுடன் உலக வளிமண்டலவியல் தினம் 2014 மார்ச் 23 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. பாடசாலைபிள்ளைகள், பங்குதாரர், முகவராண்மைகளின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஆயுதப்படையினர், திணைக்கள கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றினர்.

**2.5.1.3.2 பருவகாலக் கருத்தரங்கு**

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவகாலம் ஆரம்பிக்கும் சராசரி திகதிக்கு குறைந்தது இரண்டு வாரத்திற்கு முன்னர் ‘‘பருவகாலகருத்தரங்கு’’ என அழைக்கப்படும் கூட்டம் ஒன்று திணைக்களத்தின் பங்குதாரர்களுடன் ஒழுங்கு செய்யப்படுகின்றது. இந்த கருத்தரங்கின், பருவகாலத்திற்கான நீடிக்கப்பட்ட பருவகால எதிர்கூறல்கள் நம்பக மட்டத்திலான விபரங்களுடன் எண்முறைமாதிரி வெளியீடுகளின் அடிப்படையில்

எதிர் வரும் பருவகாலத்திற்கு தயாராகும் வகையில் பங்குதாரர் முகவராண்மைகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் கலந்துரையாடப்படுகின்றன.

### 2.5.1.4. கண்காட்சியில் பங்கேற்றல்

2014 ஆம் ஆண்டில் வளிமண்டலவியல் திணைக்களம் "தேசத்திற்குமகுடம்'' கண்காட்சியில் பங்குபற்றியது. வளிமண்டலவியல் அவதானிப்புகள்-உபகரணங்களை பிரதானமாக உள்ளடக்கிய திணைக்களத்தின் கண்காட்சிப்பொருட்கள் பாடசாலை பிள்ளைகளின் ஆர்வத்தைதூண்டியது. ''தேசத்திற்குமகுடம்'' கண்காட்சிக்கு மேலதிகமாக பாடசாலைகளில் இடம்பெற்ற கண்காட்சிகள் 14 இலும் திணைக்களம் பங்குபற்றியது.

### 2.5.2. வளிமண்டலவியல் கருவிகளும் உபகரணங்களும்

வளிமண்டலவியல் அலகுகளை தாபிக்கவும் தரவுகளைசேகரிக்கவும், தொழில்நுட்ப ஆலோசனைகளை பெறவும் அவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்யும் வேளையில் அவசியமானதுமான அறிவுருத்தல்கள் மற்றும் பயிற்சி வழங்கப்பட்டன. மழைமானி நிலையங்கள் மற்றும் கமத்தொழில் வளிமண்டலவியல் நிலையங்கள் ஆகியவற்றுக்கு அவசியமான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

### 2.5.2.1 உபகரணப்பிரிவு

2014ஆம் ஆண்டில் திருகோணமலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வளிமண்டலவியல் அவதானிப்பு அடைப்பிடம் அமைக்கப்பட்டது. மேலும் இவ்வாண்டில் 8 வளிமண்டலவியல் நிலையங்கள் வளிமண்டலவியல் உபகரணங்ள் பழுதுபார்க்கப்பட்டன.

காற்றழுத்தமானியின் அளவீடுகள் 8 வான்படை முகாம்களிலும் வர்த்தகதாபனம் ஒன்றிலும் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆண்டில் கணிசமான அந்நிய செலாவனியை சேமிக்கும் வகையில் இரண்டு நீர்மமிலாகாற்றழுத்தமானிகள், பதின்நான்கு வெப்பம்பதிகருவிகள், பதின்நான்கு மழைமாணிகள், பன்னிரண்டு நீர்வரைபடகருவிகள் மற்றும் ஐந்து காற்றுவேகமானிகள் உள்நாட்டிலேயே பழுதுபார்க்கப்பட்டன.

### 2.5.2.2. இலத்திரனியல் பொறியியல் பிரிவு

இலத்திரனியல் பொறியியல் பிரிவின் பிரதான கடமையானது மின்சார மற்றும் இலத்திரனியல் வளிமண்டலவியல் உபகரணங்களை பழுதுபார்த்து பேணுவதாகும். மேலும் இவ்வாண்டில் தானியங்கிவானிலை முறைமை வலைப்பின்னல் மற்றும் தொலை அளவுக்கருவி மழைமானி வலைப்பின்னல் பழுதுபார்த்தல் மற்றும் பேணுகை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

## 2.6. ஆராய்ச்சி

2014 ஆம் ஆண்டில் பின்வரும் ஆராய்ச்சி ஆய்வுகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்டன.

1. விடயம்ஆய்வு : கிழக்கு இலங்கையில் பருவகால வெள்ளப்பெருக்கு கண்காணிப்பு.
2. இலங்கை மற்றும் பருவகால பிராந்தியத்தின் மீதான மேகக்கதிர் இயக்கதாக்கம் பற்றிய ஒப்பீட்டு ஆய்வொன்று
3. இலங்கை மழைவீழ்ச்சி மீதான லா-நினப(La-Nina) செல்வாக்கு
4. இலங்கையில் ஏற்படும் மின்னல் தாக்கம் பற்றிய சமுதாயம்சார் பாதிப்பு படவரைவு
5. நிலையான வீழ்படிவுசுட்டெண் (SPI) பயன்பாட்டின் மூலம் இலங்கையின் வறட்சிக் கண்காணிப்பு.

6. 2000-2090 காலப்பகுதிக்கு சுருக்க(PRECIS) பயன்பாட்டை உபயோகித்து காலநிலை சூழ்நிலைகளை தயாரித்தல்.

7. வரைகலை புள்ளிவிபரமென்பொருளை உபயோகித்து இலங்கை காலநிலை வலயமாக்கல் செயற்பாடு.

8. இலங்கை மேற்கு மற்றும் தெற்கு கடற்கரையை அணுகும்புயல் வடிவகாற்றை உருவகப்படுதுதல்.

9. இலங்கை மீதான கடும்மழை மற்றும் கடினமானகாற்று ஆகியவற்றுக்கான WRF உருவாக்கப்படுதல் (01.06.2014)

## 2.7. வரையறுக்கப்பட்ட வானியல்சேவைகளை வழங்கல்

சூரியஉதயம், சூரியன் மறைதல் மற்றும் சந்திரன் பிரகாசிக்கும் வேளை, கோள்கள் கண்களுக்கு புலப்படும்தன்மை, புதிய சந்திரனின் தோற்றம், சந்திரனின் வளர்பிறை போன்றன கணிப்பிடப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக் குவழங்கப்படுகின்றது. திணைக்களத்தின் சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவரின் சேவைகள் போயா மற்றும் அரசாங்க விடுமுறைதின குழுவிற்கு வழங்கப்படுகின்றன.

## 2.8. திணைக்களத்தின் அபிவிருத்திப் பணிகள்

### 2.8.1. நிலையான இயக்கச்செயற்பாடு

அபாய சூழ்நிலைகளில் நிலையான இயக்கச்செயற்பாடுகள் மிகவும் அவசியமாகின்றன. எனவே இந்த ஆண்டில் மோசமான வானிலை நிலைமைகள் பற்றிய தகவல்களை பரிமாற்றும் வேளையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அனைத்தும் வகிக்கவேண்டிய வகிபாகம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் எந்தமுறையில்

அவ்வாறான தகவல்களை பரிமாற்றம் செய்யவேண்டும் என்ற இணக்கப்பாடும் ஏற்பட்டன. அதற்கிணங்க திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்ட விளம்பரங்களில் உபயோகப்பட்ட தொழில்நுட்ப சொற்களின் நடைமுறை விளக்கம் பற்றிய நியமங்களும் நிலையான இயக்கச் செயற்பாடுகளும் வகுக்கப்பட்டன.

### 2.8.2. நடாத்தப்பட்டபயிற்சி /கருத்தரங்குகள்-

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் ஊடாக கொரியகுடியரசின் அனுசரனையுடன் வளிமண்டலவியல் திணைக்களமானது '' வளிமண்டலவியல் சேவைகளுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சிசெயலமர்வை'' 2014 நவம்பர் 8ஆம்திகதிமுதல் 16ஆம்திகதி வரை நடாத்தியது. பிராந்திய நாடுகளில் இருந்து பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர்.

## 2.9. இயலுமை விருத்தி

### 2.9.1.வெளிநாட்டுவிஜயங்கள்

(கூட்டங்கள்/பயிற்சிகள்/செயலமர்வுகள்/பயிற்சிப்பட்டறைகள்)

2014 ஆம் ஆண்டில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணியாட்களால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் , கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றில் பங்குபற்றவென மொத்தமாக 35 வெளிநாட்டு விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய விஜயங்களின் விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| பெயர் | பதவி | புலமைப்பரிசில் | நாடு | நிதியளிப்பு |
|---|---|---|---|---|
| G.K.n`e;jtpjhud | வளிமண்டலவியலாளர் | Msc வளிமண்டலவியல் நிகழ்ச்சித்திட்டம் | பிலிப்பைன்ஸ் | WMO |
| A.K.கருணாரத்ன | பிரதி பணிப்பாளர் | அயன மண்டல சூறாவளி எதிர்கூறல் செயற்பாடு பற்றிய பயிற்சி | இந்தியா | WMO |

| | | | | |
|---|---|---|---|---|
| L.சந்திரபால | பணிப்பாளர் நாயகம் | RIMES செயலணிகூட்டம் | தாய்லாந்த | RIMES |
| D.J.A. வீரவர்தன | பணிப்பாளர் | அயன மண்டல சூறாவளிகள் பற்றிய குழாததின் 41ஆம்அமர்வு | வங்காலதேசம் | WMO |
| M.M.P. மெண்டிஸ் | வளிமண்டலவியலாளர் | மீன்பிடி வலயங்கள் தொலையுணர்வு பற்றிய பயிற்சிபாடநெறி | இந்தியா | INCOIS |
| L.சந்திரபால | பணிப்பாளர்நாயகம் | IPCC யின் 38 ஆவதுஅமர்வு | ஜப்பான் | IPCC |
| S.R. ஜயசேக்கர | பணிப்பாளர் | IPCC யின் 39 ஆவதுஅமர்வு | ஜேர்மனி | IPCC |
| K.H.M.S.பிரேமலால் | பணிப்பாளர் | வளிமண்டலவியல் சேவைகளுக்கான (ICT) தகவல் தொழில்நுட்பவியல் | கொரியா | KOICA |
| P.M. ஜயகொடி | வளிமண்டலவியலாளர் | வளிமண்டவியல் சேவைகளுக்கான தகவல் தொழில்நுட்பவியல் | கொரியா | KOICA |
| P.G. யசரத்ன | வளிமண்டலவியலாளர் | வளிமண்டவில் சேவைகளுக்கான தகவல் தொழில்நுட்பவியல் | கொரியா | KOICA |
| J.W. கருணாரத்ன | வளிமண்டலவியலாளர் | வளிமண்டவில் சேவைகளுக்கான தகவல் தொழில்நுட்பவியல் | கொரியா | KOICA |
| A. ஜயசிங்கஆரச்சி | பிரதிபணிப்பாளர் | SASCOF-55கூட்டம் | இந்தியா | WMO |
| L. சந்திரபால | பணிப்பாளர் நாயகம் | காலநிலை பாரம்பரியத்தை மீட்டல் பற்றிய பயிற்சிப்பட்டறை | மொசாம்பிக் | WMO |
| M.விமலசூரிய | பிரதிபணிப்பாளர் | காலநிலை பாரம்பரியத்தை மீட்டல் பற்றிய பயிற்சிப்பட்டறை | மொசாம்பிக் | WMO |
| P.H.C. தசில்வா | வளிமண்டலவியலாளர் | பருவகால எதிர்கூறல் பற்றிய பயிற்சிப்பட்டறை | வங்காலதேசம் | SMRC |
| A.R. வர்னசூரிய | பிரதி பணிப்பாளர் | SSOP பயிற்சிப்பட்டறை | சீனா | WMO |
| P.A.A. பிரியன்த | வளிமண்டலவியல் உத்தியோகத்தர் | வறட்சி கண்காணிப்பு மற்றம் முன்னெச்சரிக்கை பயிற்சி | இந்தியா | ESCAP |

| | | | | |
|---|---|---|---|---|
| D.W.T. தர்சிகா | உதவியாளர் | அயனமண்டல தீவுகளின் காலநிலை மாற்றம் பற்றியசெயலமர்வு | சீனா | JMA |
| D.G. பர்னாந்து | வளிமண்டலவியலாளர் | மேம்பட்டவானிலைஎதிர்வுகூறல்மற்றும்காலநிலை | இந்தியா | BIMSTEC |
| P. கருணாபால | வளிமண்டலவியலாளர் | மேம்பட்ட வானிலை எதிர்வுகூறல் மற்றும் காலநிலை | இந்தியா | BIMSTEC |
| P.G. யசரத்ன | வளிமண்டலவியலாளர் | வளிமண்டலவியல் சேவைகளை வலுப்படுது;தல் | ஜப்பான் | JMA |
| A.L.K. விஜேமான | பிரதிபணிப்பாளர் | அயனமண்டலசூறாவளிஎதிர்கூறல் செயலமர்வு | ஓமான் | WMO |
| K.D. சுஜீவா | வளிமண்டலவியலாளர் | அயனமண்டல சூறாவளி எதிர்கூறல் செயலமர்வு | ஓமான் | WMO |
| A.வீரவர்தன | பணிப்பாளர் | SMRC ஆட்சிச்சபையின் 12ஆவது கூட்டம் | வங்காலதேசம் | GOSL |
| M.D. தயாரத்ன | பணிப்பாளர் | தரவு மீட்புதிரும்பல் கூட்டம்-INDARE | சுவிட்சர்லாந்து | WMO |
| M.. கருணாதிலக | பணிப்பாளர் | கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு | மலேசியா | GOSL |
| L. சந்திரபால | பணிப்பாளர் நாயகம் | IPCC யின்14ஆவது அமர்வு | டெண்மார்க் | IPCC |
| S.R. ஜயசேகர | பணிப்பாளர் | IPC கூட்டம் பற்றிய விஞ்ஞானயசெயலமர்வு | பூட்டான் | SMRC |
| W.R.S. பர்னாந்து | வளிமண்டலவியல் உத்தியோகத்தர் | கருவி அளவீடு மற்றும்பேணுகை | இந்தியா | WMO |
| L.M.S.P.ஜயவர்தன | பிரதி பணிப்பாளர் | காலநிலை சேவைகளின் பாலினபரிமானம் | சுவிட்சர்லாந்து | WMO |
| N. குமாரசிங்க | மின்னியல் பொறியியலாளர் | JMA-WIS நடைமுறையாக்கம் | ஜப்பான் | JMA |
| T.M.N. பீரிஸ் | வளிமண்டல வியலாளர் | JMA-WIS நடைமுறையாக்கம் | ஜப்பான் | JMA |
| D.G. | வளிமண்டல | தரவு தன்மையாக்கல் மற்றும் குழும | சீனா | WMO |

| | | | | |
|---|---|---|---|---|
| பர்னாந்து | வியலாளர் | எதிர்கூறல் பற்றிய செயலமர்வு | | |
| A. வீரவ ர்தன | பணிப்பாளர் | RA-11இன் 6ஆவது பிராந்திய கருத்தரங்கு | கட்டார் | WMO |
| I.M.S.P ஜயவர்தன | பணிப்பாளர் | அயனமண்டல சூறாவளி பற்றிய 8ஆவது சர்வதேச செயலமர்வு | கொரி யா | WMO |

### 2.9.2. உள்ளுர் பயிற்சிகள்

இந்த ஆண்டில், திணைக்களத்தைச் சேர்ந்த 48 பணியாட்கள் பல்வேறு நிறுவனங்களில் /முகவராண்மைகளில் பயிற்சிகளை பெற்றனர். மேலும் இலங்கை தொழில்நுட்பவியல் சேவை உத்தியோகத்தர்களின் நன்மைக்காக ''தொடர்கல்விமற்றும்பயிற்சி'' நிகழ்ச்சித்திட்டங்கள் 97 பணியாள் உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இரண்டுமுறை நடாத்தப்பட்டன. மொத்தம் 55 வளிமண்டலவியல் உதவியாளர்களுக்கும் திசைமுகப்படுத்தல் பயிற்சிவழங்கப்பட்டது.

## 3. நிருவாகம் மற்றும் நிதிப்பிரிவுகளின் செயலாற்றுகை

### 3.1. நிருவாகப்பிரிவு

2014 டிசெமபர் 31ஆம் திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியும் உண்மையில் உள்ள பணியாட்களும் முறையே 460 மற்றும் 331 ஆகும்.

வளிமண்டலவியல் உத்தியோகத்தர் /அவதானிப்பாளர்/தொடர்பாடலாளர் ஆகிய பதவிகளுக்கு முப்பத்தொன்பது(39) வெற்றிடங்களும், சிரேஸ்ட வளிமண்டலவியலாளர் உத்தியோகத்தர் பதவிக்கு இருபத்துஇரண்டு (22) வெற்றிடங்களும் வளிமண்டலவியல் உதவியாளர் பதவிக்கு பதின்நான்கு (14) வெற்றிடங்களும், பொது முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு பதின்மூன்று (13) வெற்றிடங்களும் இந்த ஆண்டின் இறுதியில் காணப்படுகின்றன.

### 3.1.1 ஆட்சேர்ப்பு/வெற்றிடங்கள்நிரப்புதல்

2014 ஆம் ஆண்டில் பின்வரும் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன.

| | |
|---|---|
| வளிமண்டலவியலாளர் (இலங்கை விஞ்ஞானசேவை) | -08 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்கள் | -08 |
| சாரதிகள் | - 02 |
| வளிமண்டலவியல் உதவியாளர்கள் | -09 |

2014ஆம் ஆண்டில் இலங்கை கணக்காய்வாளர் சேவையைச் சேர்ந்த திரு.யு.ஜீ.விஜயகேவா பகுதிநேர அடிப்படையில் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வாளராக பதவியேற்றார்.

### 3.1.2.ஓய்வுபெறல், பதவிவிலகல், விடுவிப்புகள், இறப்புகள்

பதவியில் இருந்து இடைநிறுத்தம் மற்றும் இறப்புக்கள் 2014 ஆம் ஆண்டில் 09 ஓய்வுபெறல்கள் மற்றும் 05 பதவி விலகல்கள் என்பன பதிவாகிய அதேவேளை திணைக்களத்தில் இருந்து 05 உத்தியோகத்தர்கள் வேறுநியமனங்களை பெறுவதற்காக விடுவிக்கப்பட்டனர். மேலும் இரண்டு பதவியில் இருந்து இடைநிறுத்தும் கடிதங்கள் வழங்கப்பட்டன. இரண்டு பணியாட்களின் இறப்பும் பதிவாகியது.

### 3.1.3 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் இணைத்துக்கொள்ளல்

கடந்த ஐந்து (05) ஆண்டுகளுக்குள் ஓய்வு பெற்றுச்சென்ற வளிமண்டலவியலாளர் (01) ஒருவரும் (12) பன்னிரண்டு வளிமண்டலவியல் உத்தியோகத்தர்களும் பணியாள் பற்றாக்குறை காரணமாக பொதுசேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

### 3.1.4. பரீட்சைகள்

இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களுக்கான திணைக்களத்தின் முதலாம் இரண்டாம் பரீட்சைகள் மற்றும் வளிமண்டலவியல் உதவியாளர் பதவிக்கான முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தடைதாண்டல் பரீட்சைகளும் நடாத்தப்பட்டன.

### 3.1.5. ஏலம்

2014ஆம் ஆண்டின் ஆரம்பித்தில் பொருட்பதிவேட்டு அளவைச்சபையால் கழிக்கப்பட்ட பொருட்கள் 2014ஆகஸ்ட்மாதத்தில் விற்கப்பட்டன. ஏலத்தின் மூலம் ஈட்டப்பட்ட தொகையான ரூபா 38,660.00/ அரசாங்க நிதியத்தில் பற்றுவைக்கப்பட்டது.

### 3.1.6. நிர்மாணங்கள்

நுவரெலியாவில் சுற்றுலா விடுதிப் பொறுப்பாளருக்கான விடுதி மற்றும் திருகோணமலையில் புதிதாக தாபிக்கப்படும் வளிமண்டலவியல் அலுவலகத்திற்கான கட்டிடம் என்பவற்றின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த இரண்டு நிர்மாணப்பணிகளும் 2015 ஆம் ஆண்டின் முதல் அரையண்டுபகுதியில் முடிவடையும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றன.

## 3.2. நிதிப்பிரிவு

### 3.2.1. வருமானம்

2014ஆம் ஆண்டு வருமானக்கணக்குகள் பற்றிய எதிர்வுகூறல்களுக்கு எதிரான உண்மைத்தன்மை

தலைப்பு: 304 நிகழ்ச்சித்திட்டம்:02 கருத்திட்டம்:01

| வருமான குறியீடு | வருமானப்பொருள் | 2014வருமானம் | | விபரம் |
|---|---|---|---|---|
| | | மதிப்பீடு(ரூபா) | உண்மையான (ரூபா) | |
| 20.02.01.01 | அரசாங்க ஆதன வாடகையில் இருந்து ஈட்டிய வருமானம் அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீடுகள் மீதான வாடகை | 550,000 | 413,342 | பணியாளர் நாயகம் மற்றும் oic விடுதிகளின்வாடகை(வெளிநிலையங்கள்) |
| 20.02.01.99 | அரசாங்கஆதனவாடகைமற்றும்ஏனையவாடகைமூலம்ஈட்டியவருமானம் | 12,600 | 11,900 | வாகனக்கட்டணம்பணிப்பாயர்நாயகம்மற்றும் பணிப்பாளர்கள் 02 |
| 20.02.02.99 | வட்டி-ஏனையவை | 1,600,000 | 1,259,673 | அரசாங்கஉத்தியோகத்தர்களின்முற்பனபீகணக்குவட்டி |
| 20.03.02.99 | விற்பனை வருமானம் மற்றும் கட்டணங்கள் நிருவாக கட்டணங்கள் மற்றும் துணைப்பொருட்களின் கட்டணங்கள் | 6,500,000 | 6,447,235 | பல்வேறு துறைகளுக்கு தரவுகள் மற்றும் அறிக்கைகள் வழங்கியதில் இருந்து . உதாரணம்- ஒப்பந்தக்காரர்கள் பல்கலைக்கழகங்கள் போன்ற |
| 20.03.99.00 | விற்பனை வருமானம் மற்றும் கட்டணங்கள் ஏனைய பெறுகைகள் | 500,000 | 1,266,311 | பாடசாலை விஜயங்கள்,அறிக்கைகள்வழங்கல், கேள்விப்பத்திர பதிவுகட்டணங்கள், விரிவுரைகள் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செயலமர்வுகள் , கேட்போர்கூடம் வாடகைக்குவிடல், புத்தகவிற்பனை, நுவரெலியா சுற்றுலாவிடுதி கட்டணங்கள் ஆகியவற்றில்இருந்து |
| மொத்தம் | | 9,162,600 | 9,398,461 | |

2014 செயற்பாடுகளுக்கு எதிரான மூலதன செலவினம்

தலைப்பு:304 நிகழ்ச்சித்திட்டம்:02 கருத்திட்டம் 01

| இலக்குக்குறியீடு | இலக்குத்தலைப்பு | நிகர ஏற்பாடுகள் 2014 ரூபா | செலவினம் 2014 ரூபா | வீதம் (%) | விபரம் |
|---|---|---|---|---|---|
| கருத்திட்டம் 01 | மொத்தம் (கருத்திட்டம்01)<br><br>வளிமண்டல வியல்சேவைகள்<br><br>மொத்தம்<br><br>புனர்நிர்மாணம்மற்றும்மேம்பாடுகள் | 83,795,000<br><br>83,795,000<br><br>5,600,000 | 72,909,032<br><br>72,909,032<br><br>5,5, | 87<br><br>87<br><br>100 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2001 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக் கள் | 5,600 ,000 | 99,3 97<br><br>5,5, 99,3 97 | 100 | தலைமைஅலுவலககட்டிடத்தின்மேம்பாடு ரூபா.4.58 மில்லியன் பணிப்பாளர் நாயகவிடுதிகள் பராமரித்தல், இரத்தினபுரி வளிமண்டலவியல் அலுவலகம் மற்றும் ஏனைய சமயாசமய பழுதுபார்ப்புகள். |
| 2011 | நிலையான ஆதனங்களை கையேற்றல்.<br><br>வாகனங்கள் | 38,48 7,783<br><br>90,00 0 | 28,4 70,1 31<br><br>89,9 10 | 74<br><br>100 | மாயலுபல்லம,புத்தளம், திருகோணமலை,அம்பாந்தோட்டை, பொத்துவில்,மட்டக்களப்பு, வளிமண்டவலியில் அலுவலகங்ளுக்கு 06 துவிச்சக்கர வண்டிகள் கொள்வனவுக்காக |
| 2104 | கட்டிடங்களு ம் கட்டமைப்புக ளும் | 17,09 5,479 | 7.09 3.99 3 | 41 | யாழ்பாணம், நுவரெலியா மற்றும் திருகோணமலை வளிமண்டலவியல் அலுவலகம் ஆகியவற்றுக்கான புதிய நிர்மாணிங்கள் |
| 2105<br><br>2401<br><br>2502 | காணி மற்றும் காணி மேம்பாடுகள்<br><br>இயலுமை கட்டி யெழுப்பல்<br><br>பணியாற் டொகுதி பயிற்சி<br><br>ஏனைய மூலதன செலவினம்<br><br>முதலீடுகள் | 2,000 ,000<br><br>2205, 000<br><br>2,205 ,000<br><br>37,50 2,217<br><br>37,50 | 1,98 5,61 299<br><br>2,19 2,27 5<br><br>2,19 2,27 5<br><br>36,6 47,2 | 99<br><br>49<br><br>99<br><br>98<br><br>98 | கொழும்புதலைமைஅலுவலகம்நிலத்தோற்ற அமைப்பில்மற்றும்ஏனையகாணிமேம்பாட்டு பணியாட்கள் , தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்பம்சாரா உத்தியோகத்தர்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் .<br><br>விழிப்பணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூபா 1,502,216,06 தானியங்கு வானிலை முறைமை ரூபா 35,145,013,17<br><br>வளிமண்டலவியல் உபகரணம் (DF) ரூபா 4,998,325,80 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 2,217 | 29 | | |
| 2012 | தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 13,000,000 | 36,647,229 | 100 | வளிமண்டலவியல் உபகரணம் (FAG)ரூபா 1,302,304,00 |
| | இயந்திரத் தொகுதி | | | | |
| 2013 | | 6,302,304 | 12,999,986 | 100 | |
| | | | 6300,630 | | |

### 3.2.2. செலவினம்

2014 ஏற்பாடுகளுக்கு எதிரான மீண்டெழும் செலவினம (ரூபா)

தலைப்பு 304 நிகழ்ச்சித்திட்டம் 02 கருத்திட்டம் 01

| வகை | கருத்திட்டம் 01 | | % | விபரம் |
|---|---|---|---|---|
| | ஏற்பாடு(ரூபா) | செலவினம்(ரூபா) | | |
| தனிப்பட்ட வேதனங்கள் | 146,850,000 | 146,792,223 | 100 | சம்பலங்கள்,கூலிகள்,மேலதிகநேரம் விடுறை கொடுப்பனவு மற்றும் ஏனைய படிகள் |
| ஏனைய மீண்டெழும்செலவு | 59,880,000 | 59,744.121 | 100 | |
| பிரயாணச்செலவு | 1,410,0000 | 1378.619 | 78 | உள்ளூர்பிரயாணம், வெளிநாட்டுபயணம் வெளிநாட்டு கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள். |
| வழங்கள் | 10,430,000 | 10,426.92000 | 100 | வளிமண்டலவியல் பலூன்கள் ரேடியோசொன்டுகள்,சூரியஒளி அட்டைகள் , காகிதாதிகள், அலுவலக தேவைகள் எரிபொருள், சாப்பாடு, சீருடைகொள்வனவு |
| பேணுகைசெலவினம் | 5,413,000 | 5,409,416 | | |
| சேவைகள் | 34,394,330 | 34,300,196 | 100 | |
| மாற்றங்கள் | | 8,228,970 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 8,232,670 | | | |

மொத்த செலவினம் 206,730,000 206,536,344 100

2014 முற்பணக்கணக்கு சுருக்கம்.

தலைப்பு: 304 நிகழ்ச்சித்திட்டம் 02 கருத்திட்டம் 01

| விடயம் | 2014 மதிப்பீடுரூபா | 2014 உண்மையானரூபாசெலவு |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்கள் முற்பண கணக்குகள் செலவினத்தின் உச்ச எல்லை | 10,000,000 | 7148,201 |
| பெறுகைகளின் குறைந்தபட்ச எல்லை | 5,500,000 | 8,299,327 |
| பற்றுநிலுவையின் உச்சஎல்லை | 60,000,000 | 30574,147 |

#### 4. நன்றி நவிலள்

திணைக்களத்தின் உததியோகத்தர்களுடன் இணைந்து பல்வேறு கருத்திட்டங்கள் , நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கூட்டங்கள் ஆகியவற்றில் ஒத்துழைப்பு வழங்கிய அரசாங்க, அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு எனது நன்றியை

பதிவுசெய்துகொள்ள நான் விரும்புகின்றேன். பொதுமக்களுக்கு வானிலை தகவல்களை உடனடியாக வழங்கிய ஊடகத்துக்கும் எனது நன்றி. இறுதியாக உடனடியான ஒத்துழைப்பையும் விசுவாசமான சேவையையும் வழங்கிய திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது தனிப்பட்ட நன்றியை தெரிவிக்கவும் விரும்புகின்றேன்.